செய்தி வெளியீடு எண்–784 நாள்– 22.9.2008

**<u>தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணிப்புரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு சம்மந்தமான பத்திரிக்கை செய்திக் குறிப்பு</u>**

தமிழ்நாட்டில் தற்போது அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆகிய ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.

2) பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் 1998 ம் ஆண்டில் முடிவடைந்த நிலையில் அதன் பின்னர் ஊதிய திருத்தம் குறித்து மாநில தொழிற் சங்கங்களுடனான பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் 2001–ம் ஆண்டில் தொழிலாளர்களின் பொதுவான கோரிக்கைகளை சிறப்பு தொழில் தீர்ப்பாயத்தின் பரிசீலனைக்கு தமிழக அரசு அனுப்பி வைத்தது. இயங்கும் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பிரச்சனையும், இந்த தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

3) நீண்ட காலமாக நிலுவையில் இருந்த, இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பிரச்சனையில் சுமுகமாக தீர்வினை விரைவில் காண்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழநாடு அரசு மேற்கொண்டது. அவ் வகையில் இப் பிரச்சனை குறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளிக்க கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் தலைமையில் ஒரு குழுவினை அரசு கடந்த ஆண்டு அமைத்தது. இந்த குழுவானது ஆலை நிர்வாகங்கள் மற்றும் மத்திய தொழிற் சங்கங்களின் குழுவினருடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தி தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இந்த குழுவின் பரிந்துரைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிலாளருக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.560/– அளவுக்கு பணபயன் கிடைக்கும் வகையில் ஊதிய உயர்வினை நடைமுறைப்படுத்த அண்மையில் ஆணை வழங்கியது.

4) இதனைத் தொடர்ந்து இயங்கும் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட, 22.09.2008 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறி துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆலை நிர்வாகிகள் மற்றும் தொழிற் சங்கங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வொப்பந்தம் 01.01.2008 முதல் நடைமுறைபடுத்தப்படும். இவ்வொப்பந்தத்தின்படி இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் சுமார் 1336 தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.560/– அளவுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும். இதன் மூலம் 5 இயங்கும் கூட்டுறுவு நூற்பாலைகளுக்கு ஆண்டிற்கு சுமார் ரூ.90,00,000 நிதிச் சுமை ஏற்படும்.

*******

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.